# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2004 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்*

---

*(2004 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2004, ஒற்றோபர் மாதம் 08 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** *II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 6.25** **தபாற் செலவு : ரூபா 4.50**

## 2004 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்

[2004 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ—ஓ. 13/2004
4826

**2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத் திருத்துவதற்கும் ; 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தால் 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பாகம் VI இல்லாதொழிக் கப்பட்டமை எவ்வாறிருப்பினும், நிதிச் சட்டத்தின் பாகம் VI இன் நடைமுறைக்கு ஏற்பாடு செய்வதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கு மானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம் 2004 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

### பாகம் I

### பொது

2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தைத் திருத்துதல்.

**2.** இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம் அச்சட்டத்தின் பாகம் IV (பிரிவுகள் 19 மற்றும் 20) என்பதனை நீக்கஞ் செய்வதன்மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது.

### பாகம் II

### 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் VI இன் மீள் சட்டவாக்கம்

1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் VI என்பதன் ஏற்பாடுகள் நடைமுறை யிலிருத்தல்.

**3.** (1) காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் VI என்பதன் ஏற்பாடுகள் (பிரிவு 58 முதல் 66 வரை) 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் IV என்பதன் ஏற்பாடுகளால் நீக்கம் செய்யப்பட்டமை எவ்வாறிருப்பினும் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து அத்தகைய ஏற்பாடுகள் இதன்கண் சட்டவாக்கம் செய்யப்பட்டிருக் கின்றாற் போன்று நடை முறையிலிருத்தல் வேண்டும்.

2 –H 022825– 1,500 (2004/08)

(2) காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் VI என்பதன் ஏற்பாடுகள் (பிரிவு 58 முதல் பிரிவு 66 வரை) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி நடைமுறைக்கு வருவதன்மீது, காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான சொல்லப்பட்ட சட்டத்தின்கீழான பாகம் VI தொடர்பில், ஆக்கப்பட்ட எல்லாக் கட்டளைகளும், அறிவிப்புகளும், விதிகளும் அல்லது ஒழுங்குவிதிகளும் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து பாகம் VI இன் ஏற்பாடுகளின்மீள் நடைமுறையினையடுத்து அத்தகைய கட்டளைகள், அறிவிப்புகள், விதிகள் அல்லது ஒழுங்குவிதிகள் இதன்கீழ் சட்டவாக்கம் செய்யப்பட்டுள்ளமையைப் போன்று நடைமுறையிலிருத்தல் வேண்டும்.

*1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தைத் திருத்துதல்.*

**4.** ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்துமூன்றாம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம் அதன் பாகம் VI என்பதில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அச்சட்டத்தின் 58 ஆம் பிரிவில் —

(அ) அதன் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் :—

" (1அ) இலங்கையிலுள்ள ஏதேனும் ஆதனத்தின் சொத்துவத்தின் உரித்துமாற்றம் எதுவும், விடயத்திற்கேற்ப ஏதேனும் நிர்வாக மாவட்டத்தில், பிரதேசச் செயலாளரின் பெரும்பாகத்தில் அல்லது கிராம அலுவலரின் பிரிவில் காணியின் அப்போதைய பெறுமதியை கருத்திற் கொண்டு காணி அமைச்சரினதும் பிரதான விலை மதிப்பீட்டாளரினதும் ஒருப்பாட்டுடன் நிதி அமைச்சரால் அதன் பொருட்டு ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய பெறுமதிக்குக் குறைவாக இலங்கைப் பிரசையொருவராக அல்லாத ஆளொருவருக்குப் பயனுறுத்தப்படுதலாகாது." ;

(ஆ) அதன் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் :—

"(3அ) கம்பனியொன்றுக்கு இலங்கையினுள் ஏதேனும் ஆதனத்தின் சொத்துவத்தை உரித்து மாற்றவிருக்குமிடத்து, அத்தகைய கம்பனியிலுள்ள வழங்கப்பட்ட பங்குகளின் இருபத்தைந்து சதவீதத்திற்கும் அதிகமானவை இலங்கைப் பிரசைகளல்லாத ஆட்களினால் சொந்தமாகக் கொண்டிருக்கப்படுமாயின் அத்தகைய ஆதனத்தின் உரித்துமாற்றத்தைப் பெறுபவரிடமிருந்து அத்தகைய ஆதனத்தின் பெறுமதிக்குச் சமமானவாறான அத்தகைய தொகையினைக்கொண்ட வரியொன்று அறவிடப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(இ) அதன் (4) ஆம் உட்பிரிவின் (எ) என்னும் பந்தியை நீக்கிவிட்டுப் பின்வரும் பந்தியை அதற்குப் பதிலாக இடுக :—

"(எ) அமைச்சரால் ஆக்கப்படும் கட்டளையினால் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் வகுப்பினதான அல்லது விவரணத்தினதான ஆதனத்தின் உரித்து மாற்றத்துக்கு அல்லது எவரேனும் ஆளுக்கு, ஆட்கள் குழுவுக்கு அல்லது ஆட்களின் வகுதிக்கு ஆன உரித்து மாற்றத்துக்கு ஏற்புடைத்தாதலாகாது. அத்தகைய கட்டளை ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்." ; அத்துடன்

(2) அச்சட்டத்தின் 66 ஆம் பிரிவை உடனடுத்து, அதன் 66அ என்னும் பிரிவாகப் பயனுறுவதாகிய பின்வரும் புதிய பிரிவை உட்புகுத்துவதன்மூலம் :-

"ஒழுங்கு விதிகள்.

66அ. (1) அமைச்சர், இச்சட்டத்தின் கோட்பாடு களையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றுகின்ற அல்லது அவற்றைப் பயனுறுத்துகின்ற நோக்கங்களுக்காகவும் அத்துடன் விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தால் தேவைப்படுத்தப் பட்ட விடயங்கள் தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அத்தகைய ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அத்தகைய ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் வசதிப்படக் கூடியளவு விரைவாக அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்தின் முன் கொணரப்படுதல் வேண்டும். அங்கீகரிக்கப்படாத அத்தகைய ஏதேனும் ஒழுங்கு விதி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப் படுதல் வேண்டும்.

(4) ஒழுங்குவிதியொன்று இல்லாதொழிக்கப் பட்டதாகக் கருதப்பட்ட தேதிபற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.".

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்